பணியாளர்களுக்கான ஒரு வழிகாட்டி

# பணிக்காலக் காய இழப்பீடு



MINISTRY OF MANPOWER

# பணிக்காலக் காய இழப்பீடு என்பது என்ன?

**பணியாளர்கள் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமில்லாமல் வேலை தொடர்பான காயங்கள் அல்லது தொழில் சார்ந்த நோய்களுக்கு இழப்பீடு கோர பணிக்காலக் காய இழப்பீட்டுச் சட்டம் 2019 (WICA 2019)*அனுமதிக்கிறது.**

குறிப்புகள்:
*பணிக்காலக் காய இழப்பீட்டுச் சட்டமானது, 1 செப்டம்பர் 2020 –க்கு முன்னர் நிகழ்ந்த பணி விபத்துகளுக்கு இன்னும் பொருந்தும். மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன: http://www.mom.gov.sg/workplace-safety-and-health/work-injury-compensation/resources-and-tools

## நான் பாதுகாக்கப்படுகிறேனா?




### ✓ பாதுகாக்கப்படுகிறீர்கள்

- நீங்கள் “ஒப்பந்தச் சேவையின்” கீழ் வேலை செய்கின்ற ஓர் பணியாளர்.

### ✗ பாதுகாக்கப்படவில்லை

- சீருடைப் பணியாளர்கள் - சிங்கப்பூர் ஆயுதப் படை, சிங்கப்பூர்க் காவல் துறை, சிங்கப்பூர்க் குடிமைத் தற்காப்புப் படை, மத்திய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் சிங்கப்பூர் சிறைச் சேவை.
- சுயதொழில் புரிபவர்/தனித்தியங்கும் ஒப்பந்ததாரர்
- இல்லப் பணியாளர்

## கேள்வி 1

**கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் என்னால் இப்போதும் இழப்பீட்டைக் கோர முடியுமா....**

**(i) நான் இப்போது எனது முதலாளிக்காக வேலை செய்யவில்லை அல்லது எனது வேலை நியமனம் இரத்து செய்யப்பட்டுள்ளது என்றால்?**

**(ii) நான் ஒரு வெளிநாட்டு ஒப்பந்தப் பணியில் இருந்த வேளையில் இந்த விபத்து நிகழந்தது என்றால்?**

ஆம். நீங்கள் உங்கள் முதலாளியால் பணியமர்த்தப்பட்டிருந்த வேளையில் விபத்து நிகழ்ந்திருந்தால், மேலும் உங்கள் வேலையின் போக்கில் அந்த விபத்து நிகழ்ந்திருந்தால் நீங்கள் இழப்பீடு கோரலாம்.

## நான் பணியில் காயமடைந்தேன். நான் என்ன செய்ய வேண்டும்?



**✓ மருத்துவ உதவியை நாடுங்கள். நீங்கள் விரைவாக உங்கள் முதலாளிக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்.**

- அதன்பிறகு உங்கள் முதலாளி மனிதவள அமைச்சுக்குத் (MOM) தகவல் தெரிவிக்க வேண்டியிருக்கும்.

**✓ உங்களின் அசல் மற்றும்/அல்லது மின்னிலக்க (இவற்றில் பொருந்துவது) மருத்துவச் சான்றிதழ் (Medical Certificate, MC) மற்றும் மருத்துவக் கட்டண ரசீதுகளை உங்கள் முதலாளியிடம் கொடுக்கவும்.**

- மருத்துவச் சான்றிதழ்கள் மற்றும் மருத்துவக் கட்டண ரசீதுகளின் நகலொன்றை உங்களுக்காக வைத்துக்கொள்ளவும்.
- உங்களின் மருத்துவ விடுப்பு ஊதியங்களைக் கோரவும்.
- நீங்கள் முதலில் பணம் செலுத்தியிருந்தால், உங்கள் மருத்துவக் கட்டண ரசீதுகளுக்கான தொகையை உங்கள் முதலாளியிடமிருந்து திரும்பப் பெறுங்கள்.

**✓ உங்கள் முதலாளி விபத்து குறித்து மனிதவள அமைச்சிடம் தகவல் தெரிவித்துவிட்டாரா என்று அவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.**

**✓ புதிது! உங்கள் முதலாளி சம்பவம் குறித்து மனிதவள அமைச்சிடம் தகவல் தெரிவித்ததும், உங்கள் இழப்பீட்டுக் கோரிக்கை தானாகவே WICA 2019 -இன் கீழ் செயல்படுத்தப்படும்.**

- நீங்கள் இழப்பீட்டுக் கோரிக்கையை பொதுச் சட்டத்தின்கீழ் தாக்கல் செய்தால், WICA 2019-இன் கீழ் இழப்பீட்டுக் கோரிக்கைக்கான திரும்பப் பெறுதல் படிவத்தைக் காப்பீட்டாளரிடம் சமர்ப்பிக்கவும்.
- நீங்கள் WICA 2019 அல்லது பொதுச் சட்டத்தின் கீழ் மட்டுமே இழப்பீட்டைக் கோரலாம்.




## எனது பணிக் காயத்தை எனது முதலாளி எப்போது மனிதவள அமைச்சிடம் தெரிவிக்க வேண்டும்?

**கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் உங்கள் காயத்தைப் பற்றி உங்கள் முதலாளி தகவல் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்:**


- புதிது! உங்களுக்கு ஏதேனும் வெளிநோயாளி அல்லது சாதாரண மருத்துவ விடுப்பு கொடுக்கப்பட்டிருந்தால், அல்லது
- நீங்கள் தொழில் சார்ந்த நோயால் பாதிக்கப்பட்டிருந்தால்




## நான் எதைக் கோரலாம்?

### வகை 1: மருத்துவச் செலவுகள்






### மருத்துவச் செலவுகள் என்பது என்ன?

- **மருத்துவக் கட்டண ரசீதுகள்**
- **பணிக் காயத்தின் காரணமாக செலுத்த வேண்டிய பிற கட்டணங்கள்,** எ.கா. பணிக் காய மதிப்பீட்டு அறிக்கைகளுக்கான கட்டணங்கள்
- சிகிச்சை அவசியம் என சிங்கப்பூரில் பதிவுசெய்துள்ள மருத்துவர்கள் **கருதும் காலம் வரை, உங்கள் முதலாளியால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகள் வரை செலுத்தப்பட வேண்டும்.**
- அதிகபட்ச வரம்புகளுக்கான அட்டவணையைக் கீழே காண்க

**நீங்கள் அதிகபட்ச வரம்பு வரை அல்லது விபத்து நடந்த நாளில் இருந்து ஒரு ஆண்டு வரை, இதில் எது முதலில் வருகிறதோ அது வரை, மருத்துவச் செலவுகளைக் கோரலாம்.**

| விபத்து எப்போது ஏற்பட்டது? | அதிகபட்சமாக எவ்வளவு தொகையைக் கோரலாம்? |
|---|---|
| **1 ஜனவரி 2020 -க்கு முன்னர்** | **$36,000** |
| **புதிது!** **1 ஜனவரி 2020** அன்று மற்றும் அதற்குப் பிறகு | **$45,000** |



## கேள்வி 2



**எனது மருத்துவச் செலவுகள் $55,000 ஆகும். நான் முழுத் தொகையையும் கோர முடியுமா?**


இந்த உதாரணத்தில், நீங்கள் **$40,000 + $5,000 = $45,000** -ஐ மட்டுமே இழப்பீடு கோர முடியும். இழப்பீட்டின் உச்ச வரம்பு எட்டப்பட்டுவிட்டதால், 30 ஜூன் 2020 அன்று ஏற்பட்ட மீதமுள்ள **$5,000** செலவை நீங்கள் இழப்பீடாகக் கோர முடியாது. மேலும், விபத்து ஏற்பட்டு ஒரு ஆண்டுக்கும் மேலாகி விட்டதால், 9 மார்ச் 2021 அன்று ஏற்பட்ட $5,000 செலவையும் நீங்கள் இழப்பீடாகக் கோர முடியாது.

உங்களுக்கு ஒரு விபத்து ஏற்பட்டது.

**$40,000**
ஆம், நீங்கள் முழுத் தொகையையும் இழப்பீடாகக் கோர முடியும்.

**$10,000**
நீங்கள் $5,000 -ஐ மட்டுமே இழப்பீடாகக் கோர முடியும்.


**$5,000**
உங்களால் இத்தொகையை இழப்பீடாகக் கோர முடியாது.





## வகை 2: மருத்துவ விடுப்பு ஊதியங்கள்

### நான் எப்போது மருத்துவ விடுப்பு ஊதியங்களைக் கோர முடியும்?






- நீங்கள் மருத்துவ விடுப்பு ஊதியங்களைக் **கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளவாறு கோரலாம்.**
- நீங்கள் வழக்கமாக பணியில் இருக்கும் நாட்களுக்காக (பணிபுரியும் நாட்கள்) மட்டுமே இழப்பீடு கோரலாம், ஓய்வு நாட்கள் அல்லது பொது விடுமுறை நாட்களுக்கு இழப்பீடு கோர முடியாது.


| வெளிநோயாளி மருத்துவ விடுப்பு (MC)/சாதாரண வேலைகள்* | மருத்துவமனை அனுமதி விடுப்பு | மருத்துவ விடுப்பு ஊதியங்கள் |
|---|---|---|
| 14 நாட்கள் வரை | 60 நாட்கள் வரை | i. மருத்துவ விடுப்புக்கு, முழு சராசரி மாதாந்தர வருமானங்கள் (AME); அல்லது<br>ii. புதிது! சாதாரண வேலைகளுக்கு, இது பணியாளர்களின் AME - க்குக் குறைவாக உள்ள காலத்திற்கான பணியாளரின் அசல் ஊதியத்தில் உள்ள பற்றாக்குறை (ஏதேனும் இருந்தால்). |
| விபத்து நடைபெற்ற 15வது நாள் முதல் 1 ஆண்டு வரை | விபத்து நடைபெற்ற 61வது நாள் முதல் 1 ஆண்டு வரை | i. மருத்துவ விடுப்புக்கு, AME –இல் 2/3; அல்லது<br>i. புதிது! சாதாரண வேலைகளுக்கு, இது பணியாளர்களின் AME -இல் 2/3 -க்குக் குறைவாக உள்ள காலத்திற்கான பணியாளரின் அசல் ஊதியத்தில் உள்ள பற்றாக்குறை (ஏதேனும் இருந்தால்). |

## கேள்வி 3

**எனது முதலாளி என் மருத்துவ விடுப்பு ஊதியங்களையும் மருத்துவக் கட்டண ரசீதுகளுக்கான பணத்தையும் வழங்கவில்லை. நான் என்ன செய்ய வேண்டும்?**

உங்கள் மருத்துவ விடுப்பு ஊதியங்களையும் மருத்துவச் செலவினங்களை உங்கள் முதலாளி வழங்கத் தவறினால், நீங்கள் நியமிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனத்தின் உதவியை நாடலாம் அல்லது மனிதவள அமைச்சை அணுகலாம்.

குறிப்புகள்:
*1 செப்டம்பர் 2020 அன்று அல்லது அதற்கு பிறகு ஏற்பட்ட பணி விபத்துகளுக்கு.



## வகை 3: நிரந்தரத் திறனிழப்பு (PERMANENT INCAPACITY, PI) அல்லது மரணத்திற்காக ஒரு தவணையில் இழப்பீடு



**PI -** ஒரு பணியாளரின் பணிபுரிவதற்கான திறனில் ஒரு காயமோ அல்லது மருத்துவ நிலைமையோ **நிரந்தரமான விளைவை** ஏற்படுத்தும் போது நிகழ்வது

**வழங்க வேண்டிய தொகை = [ சராசரி மாதாந்தர வருமானங்கள் ] × [ வயது பெருக்கல் காரணி ] × [ % நிரந்தரத் திறனிழப்பு[1] ]**

### நான் எவ்வாறு சராசரி மாதாந்தர வருமானங்களைக் (AME) கணக்கிடுவது?



[ வருமானம் + மிகைநேரப் பணி சம்பளம் + உணவு செலவுத்தொகை + ஊக்கத்தொகை மற்றும் மற்ற எல்லா செலவுத்தொகை(கள்) ]

விபத்து நடந்த தேதிக்கு முன்னர் உள்ள **12 மாதங்கள் செய்த வேலைக்கு வழங்கப்பட்ட ஊதியம்**

**12 மாதங்கள்**

### எவை உள்ளடங்காது?

- முதலாளி செலுத்தும் மசேநி சந்தாக்கள்
- உங்களின் வேலை நியமனத்திற்குத் தொடர்புடைய ஏதேனும் சிறப்புச் செலவுகளுக்காகச் செலுத்திய பணம் (உதாரணமாக, போக்குவரத்து செலவுத்தொகை/ ஈட்டுத்தொகை)



**பயனுள்ள உதவிக்குறிப்பு**

உங்களின் AME-ஐக் கணக்கிடுவதற்கு, **www.mom.gov.sg/calculate-ame** என்ற இணையப் பக்கத்தைப் பார்வையிடுங்கள்.

| விபத்து எப்போது ஏற்பட்டது? | இழப்பீடு வரம்புகள்* | |
|---|---|---|
| | குறைந்தபட்சம் | அதிகபட்சம் |
| **1 ஜனவரி 2020** -க்கு முன்னர் | [$88,000 x % PI] | [$262,000 x % PI] |
| **புதிது!** **1 ஜனவரி 2020** அன்று மற்றும் அதற்குப் பிறகு | [$97,000 x % PI] | [$289,000 x % PI] |

குறிப்புகள்:

[1]% நிரந்தரத் திறனிழப்பானது (% PI), பணியாளரின் நிலைமை சீரான பிறகு மருத்துவரின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டது.

*இழப்பீடு வரம்புகளுக்கு உட்பட்டது




## வகை 3: நிரந்தரத் திறனிழப்பு (PERMANENT INCAPACITY, PI) அல்லது மரணத்திற்காக ஒரு தவணையில் இழப்பீடு (தொடர்கிறது)



**மரணம் -** ஒரு பணியாளரின் இறப்புக்கு ஒரு காயம் காரணமாக இருக்கும் போது

**குடும்ப உறுப்பினர்களுக்கு அல்லது இறந்த பணியாளரின் சார்பாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை** = [ **பணியாளரின் சராசரி மாதாந்தர வருமானங்கள்** ] × [ **வயது பெருக்கல் காரணி** ]

| விபத்து எப்போது ஏற்பட்டது? | இழப்பீடு வரம்புகள்* | |
|---|---|---|
| | குறைந்தபட்சம் | அதிகபட்சம் |
| 1 ஜனவரி 2020 -க்கு முன்னர் | $69,000 | $204,000 |
| புதிது! 1 ஜனவரி 2020 அன்று மற்றும் அதற்குப் பிறகு | $76,000 | $225,000 |


## கேள்வி 4

**WICA இழப்பீட்டைக் கோருவதற்கு எனக்கு ஒரு வழக்கறிஞரின் உதவி தேவையா?**

- இழப்பீட்டுத் தொகை ஒரு நிலையான சூத்திரத்தின் அடிப்படையில் கணக்கிடப்படுவதால், உங்கள் இழப்பீட்டுக் கோரிக்கைக்கு உதவ உங்களுக்கு வழக்கறிஞர் தேவையில்லை.
- உங்களுக்கு உதவ பெங்காலி, தமிழ், சீனம் மற்றும் மலாய் மொழி பேசக்கூடிய மொழிபெயர்ப்பாளர்கள் மனிதவள அமைச்சு வசம் உள்ளனர்.

குறிப்புகள்:
*இழப்பீடு வரம்புகளுக்கு உட்பட்டது

## நான் WICA இழப்பீடு ஒன்றைக் கோர வேண்டும். நான் என்ன செய்ய வேண்டும்?






### எனது WICA இழப்பீட்டுக் கோரிக்கை

**புதிது!** உங்கள் முதலாளி விபத்து குறித்து மனிதவள அமைச்சிடம் தகவல் தெரிவித்ததும், உங்கள் இழப்பீட்டுக் கோரிக்கையை நியமனம் செய்யப்பட்ட காப்பீட்டு நிறுவனம்*தானாகவே செயல்படுத்தும்.

### மருத்துவ மதிப்பீடு செய்துகொள்ளுங்கள்

- எல்லா மருத்துவச் சந்திப்புத் திட்டங்களிலும் கலந்துகொள்ளுங்கள்.
- மருத்துவமனைகள்/மருந்தகங்களை மாற்றக் கூடாது.
- மருத்துவமனை உங்களை மதிப்பீடு செய்து, உங்கள் காயத்தின் அளவைப் பற்றி நியமனம் செய்யப்பட்ட காப்பீட்டு நிறுவனத்திற்குத் தெரிவிக்கும்.

### கணக்கீட்டு அறிக்கையைப் (Notice of Computation, NOC) பெறுங்கள்

**புதிது!** நியமனம் செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனம், உங்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஏதேனும் இழப்பீட்டின் கணக்கீட்டு அறிக்கையை (NOC) வழங்கும்.

### இழப்பீட்டுக் கோரிக்கை மற்றும் பணமளிப்பு விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ளுங்கள்

- NOC-க்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால், அறிக்கை வழங்கப்பட்ட 21 நாட்களுக்குள் உங்கள் இழப்பீட்டைப் பெறுவீர்கள்.
- ஏதேனும் எதிர்ப்பு இருந்தால், அதைத் தீர்ப்பதற்கு மனிதவள அமைச்சு உதவும். மேலும், வழங்கப்பட வேண்டிய இழப்பீடு தொடர்பாக ஒரு ஆணையை வழங்கும்.

### கேள்வி 5

**நான் ஒரு வெளிநாட்டுப் பணியாளர். எனது WICA இழப்பீட்டுக் கோரிக்கை இன்னமும் செயல்முறையில் இருக்கும் வேளையில், எனது முதலாளி என்னை எனது தாய்நாட்டிற்குத் திருப்பியனுப்ப முடியுமா?**

நீங்கள் சிங்கப்பூரில் தங்கியிருப்பது மனிதவள அமைச்சுக்கு அவசியமெனில், உங்கள் முதலாளி உங்களை தாய்நாட்டிற்கு திருப்பியனுப்ப முடியாது.

நீங்கள் திரும்பிச் செல்லுமாறு அவர் வற்புறுத்தினால், குடிவரவு சோதனைச்சாவடி அதிகாரிகளில் புகாரளியுங்கள். அவர்கள் உங்களை மனிதவள அமைச்சிடம் பரிந்துரைப்பார்கள்.

குறிப்புகள்: *நியமனம் செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனங்கள் இல்லாத வழக்குகளுக்கு, மனிதவள அமைச்சு இழப்பீட்டுக் கோரல் செயல்முறையை மேற்கொள்ளும்.

## நான் WICA-இன் கீழ் குற்றம் புரிந்தால் என்ன நிகழும்?



மனிதவள அமைச்சு உங்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கும்.

தண்டத்தொகைகள்:

| நேர்மையற்ற முறையில் இழப்பீடு பெறுதல் | | அதிகாரிகளுக்குத் தவறான தகவல்களை வழங்குதல் | |
|---|---|---|---|
| • **முதல் குற்றத்திற்கு:** $15,000 வரை அபராதம் மற்றும்/அல்லது 12 மாதங்கள் வரை சிறைத்தண்டனை | • **இரண்டாவது அல்லது அதைத்தொடர்ந்த குற்றங்களுக்கு:** $30,000 வரை அபராதம் மற்றும்/அல்லது 12 மாதங்கள் வரை சிறைத்தண்டனை | • **முதல் குற்றத்திற்கு:** $5,000 வரை அபராதம் மற்றும்/அல்லது 6 மாதங்கள் வரை சிறைத்தண்டனை | • **இரண்டாவது அல்லது அதைத்தொடர்ந்த குற்றங்களுக்கு:** $10,000 வரை அபராதம் மற்றும்/அல்லது 6 மாதங்கள் வரை சிறைத்தண்டனை |

நீங்கள் ஒரு வெளிநாட்டுப் பணியாளர் எனில், நீங்கள் சிங்கப்பூரில் மீண்டும் பணிபுரியத் திரும்பி வருவதற்கு அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.

## பணிக்காலக் காய இழப்பீடு குறித்து மேலும் விவரங்கள் அறிய

http://www.mom.gov.sg/wic

Ministry of Manpower Services Centre
1500 Bendemeer Road
Singapore 339946

வேலை நேரங்கள்:
திங்கள் முதல் வெள்ளி வரை: காலை 8:00 மணி – மாலை 5:30 மணி
(வரிசையில் நிற்பதற்கான நுழைவுச்சீட்டுகள் மாலை 4.30 மணி வரை வழங்கப்படும்)

6438 5122

ஜனவரி 2021 -இல் புதுப்பிக்கப்பட்டது

இந்த வழிகாட்டியில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள், அச்சிடப்படும் நேரத்தில் சரியானவையாகும். இந்த வழிகாட்டி, பணியாளர்களுக்கு பணிக்காலக் காய இழப்பீட்டு குறித்த அடிப்படைத் தகவல்களையும், பணிக்காலக் காய இழப்பீட்டுச் சட்டம் 2019 (WICA 2019) -இன் கீழ் அவர்களுக்கு இருக்கும் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய சுருக்கமான கண்ணோட்டத்தையும் வழங்குகிறது.
ஒரு வழிகாட்டியாக, இந்தக் கையேடு எந்தவிதச் சட்ட நிலைப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை. சந்தேகமிருந்தால், WICA 2019 -இன் விதிகளைப் படித்து அறிந்துகொள்ளவும்.

©2021 சிங்கப்பூர் அரசாங்கம் (மனிதவள அமைச்சு)
எல்லா உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.